பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 06 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதம் மற்றும் பொதுவான சவால்களை இணைந்து எதிர்கொள்வதில் **BRICS** நாடுகள் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் நிலவும் சூழல் குறித்து பாகிஸ்தான் அமைச்சர் திரு. கவாஜா ஆசிஃப் தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

4. ஈரான் ஆதரவு குழுக்கள் தாக்குதல் தொடரும் வரை, மேற்காசியாவில் அமைதி ஏற்பட வாய்ப்பில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ கூறியுள்ளார்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் குரோஷியா **1-0** என்ற கோல் கணக்கில் பனாமாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

**BRICS** நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினர்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், மாறிவரும் உலக சூழலில் தீவிரவாதம் மற்றும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் பிரிக்ஸ் அமைப்பு முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இணைய பாதுகாப்பு தொடங்கி வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் வரை அனைத்து சவால்களை எதிர்கொள்வதிலும், அந்த நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும் பிரிக்ஸ் அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

வளரும் நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கவும், நடைமுறை ஒத்துழைப்பை மேம்படுத்தவும் பாதுகாப்பான அனைவரையும் உள்ளடக்கிய உலக நாடுகளின் பங்களிப்புக்கான முயற்சிகள் இந்தியாவின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி **Jamieson Greer** தலைமையிலான அந்நாட்டு குழுவினர், நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை சந்தித்து இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இந்த சந்திப்பின்போது இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து பரஸ்பரம் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

வர்த்தக ரீதியான புதிய வாய்ப்புகள் மற்றும் வலுவான தொடர்புகளுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்தும் அப்போது ஆலோசனை மேற்கொண்டதாக திருமதி நிர்மலா சீதாராமன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் நிலவும் சூழல் குறித்து பாகிஸ்தான் அமைச்சர் திரு. கவாஜா ஆசிஃப் தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், அண்டை நாடு தனது தோல்விகள் மற்றும் மனித உரிமை மீறல்களை மறைக்கும் வகையில் வேண்டும் என்றே தவறான கருத்துகளை தெரிவிப்பதாக கூறினார்.

பாகிஸ்தான் அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துகளை இந்தியா நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பாகிஸ்தான் ஆக்கிமிப்பு கஷ்மீரில் எழுந்துள்ள சூழல், அந்தப் பகுதியில் நீண்டகால அடிப்படை உரிமைகள் மறுப்பு, பொருளாதார புறக்கணிப்பு போன்ற பாகிஸ்தானின் செயல்பாடுகளால் ஏற்பட்டிருப்பதாக திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டார்.

வளைகுடா நாடுகளில் நிலவும் சூழல் குறித்து கருத்து தெரிவித்த அவர், இந்தியாவின் 10 கப்பல்கள், பாரசீக வளைகுடா பகுதியில் இருந்து புறப்பட தயாராக உள்ளதாக கூறினார்.

<<<<>>>>

ஈரான் ஆதரவுடன் பிரிவினைவாத குழுக்கள் மேற்காசியாவில் தாக்குதலை தொடரும் வரை அந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஏற்பட வாய்ப்பில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

அபுதாபி சென்றடைந்த அவர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

மேற்காசிய பிராந்தியத்தில் ஈரான் ஆதரவு குழுவினர் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை மார்கோ ரூபியோ சுட்டிக்காட்டினார்.

ஈரானுடன் நடைபெற்று வரும் அமைதிப் பேச்சுவார்த்தை, லெபனான் சண்டைநிறுத்தம் தொடர்பான விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் லெபனான் அதிபர் **Joseph Aoun** உடன் தாம் பேச்சு நடத்தியதாகவும், தற்போது அங்கு நிலவும் சூழல் குறித்து கேட்டறிந்ததாகவம் அவர் குறிப்பிட்டார்.

ஈரான் மறு கட்டமைப்புக்காக அமெரிக்கா நிதியுதவி வழங்கும் யோசனையை திரு. மார்கோ ரூபியோ நிராகரித்தார்.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையே உயர்நிலை வர்த்தகப் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய இறக்குமதிப் பொருட்களுக்கு அமெரிக்கா அதிக அளவு வரி விதித்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தையில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் புதுதில்லியில் நேற்று அமெரிக்க வர்த்தக பிரதிநதி **Jamieson Greer** மற்றும் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் **Sergio Gor** ஆகியோரை மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் சந்தித்துப் பேசினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது அடுத்த மாதம் **24**ஆம் தேதிக்குள் இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இருதரப்பும் ஒப்புக்கொண்டதாக திரு. பியூஷ் கோயல் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே **Sergio Gor** வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா - அமெரிக்கா இடையே வலுவான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் புதிய பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன், இருதரப்பு நல்லுறவை குறிப்பிடத்தக்க அளவுக்கு

மேம்படுத்தும் வகையிலும் இந்த ஒப்பந்தம் அமையும் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கத்தார் நாட்டின் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த சம்பவத்திற்கு அந்நாட்டு மன்னர் **Sheikh Tamim Bin Hamad Al-Dani** இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடியை கத்தார் மன்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெறுபவர்கள் விரைந்து குணமடைய தமது விருப்பத்தையும் அப்போது அவர் தெரிவித்துக்கொண்டார்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கத்தார் அரசு அளித்துள்ள உதவிகளுக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு மன்னருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

கத்தாரில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இரு நாடுகளின் தலைவர்களும் உறுதிபூண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த உரையாடலின்போது மேற்காசிய நிலைமை குறித்து விவாதித்த அவர்கள், அமைதி முயற்சிக்கு கத்தார் மேற்கொண்டு வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டுவதாக குறிப்பிட்டார்.

இந்தப் பிராந்தியத்தில் விரைவில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்பட கத்தார் மன்னரின் முயற்சிகள் வழிவகுக்கும் என்றும் பிரதமர் அப்போது நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவின் மொத்த வர்த்தகம் சென்ற நிதியாண்டின் கடைசி காலாண்டில் **5** புள்ளி **4** சதவீதம் அதிகரித்திருப்பதாக நித்தி ஆயோக் துணைத்தலைவர் டாக்டர் அசோக் குமார் லாஹிரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான காலாண்டு அறிக்கையை வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நாட்டின் இறக்குமதி இந்த காலாண்டில் **6** புள்ளி **5** சதவீதம் அளவுக்கு அதிகரித்திருப்பதாக அவர் கூறினார்.

மேற்காசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தற்காலிகமானது என்றும், விரைவில் அமைதி ஏற்படும் என்றும் திரு. அசோக் குமார் லாஹிரி தெரிவித்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் சட்டவிரோதமாக செயல்படும் பயிற்சி மையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

இரு தினங்களுக்கு முன்பு லக்னோவில் பயிற்சி மையம் செயல்பட்டு வந்த அடுக்குமாடிக் கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 15 பேர் உயிரிழந்த நிலையில், முதலமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

வர்த்தக கட்டிடங்களில் தீ தடுப்பு விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்று ஆய்வு செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

அயோத்தி ராமர் கோவிலின் நன்கொடை வசூல் முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்திய 3 பேர் கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

உத்தரப்பிரதேச கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சஞ்சய் பிரசாத்திடம் இந்தக் குழுவின் தலைவர் திரு. விஜய் விஷ்வாஸ் பந்த் அறிக்கையை தாக்கல் செய்தார்.

இது முதல் நிலை அறிக்கை என்றும், விரிவான அறிக்கை பின்னர் தாக்கல் செய்யப்படும் என்றும் திரு. விஜய் விஷ்வாஸ் தெரிவித்தார்.

அயோத்தி ராமர் கோவிலில் நிதி முறைகேடு நடைபெற்றதாக எழுந்த புகாரின் பேரில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது.

<<<<>>>>

கடலோர கர்நாடகம், கொங்கன், கோவாவில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், மத்தியப்பிரதேச மாநிலங்களின் ஒருசில இடங்களில் தென்மேற்கு பருவமழை மேலும் தீவிரமடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் குரோஷியா - பனாமாவை வென்றது.

டொரான்டோவில் நடைபெற்ற இப்போட்டியில் குரோஷியா **1-0** என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போர்ச்சுகல் - உஸ்பெகிஸ்தான் இடையேயான ஆட்டத்தில் போர்சுகல் **5-0** என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

ஹூஸ்டன் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் **2** கோல்களை அடித்த போர்ச்சுகலின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

கானா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோல் எதுவுமின்றி டிராவில் முடிந்தது.

கொலம்பியா - காங்கோ இடையேயான ஆட்டம் காலை மணி **7.30**க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**